“ஒருவருக்கும் கடன்படாதீர்கள்” (ரோமர் 13:8) என்று இயேசு அல்லது வேதம் கூறுவது அதைக் குறித்தல்ல. நீங்கள் நீண்ட காலமாக கடனை வைத்துள்ளதையே (lingering debts) அது குறிக்கின்றது. அதை நீங்கள் செலுத்திவிடுங்கள், நாம் வீட்டு வாடகை, தொலைபேசி கட்டணம் போன்றவைகளை கடன்பட்டு, அவைகளைச் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஆனால் நீங்கள் நீண்ட காலமாக வைத்துள்ள கடன்களை, உங்களால் கூடுமானால், செலுத்தி தீர்த்துவிடுங்கள். அது இன்னும் உங்கள் பேரிலே இருக்க விட்டு வைக்க வேண்டாம்.

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

**செய்தி: 65-0822M கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார், Jeffersonville, Indiana USA**

---

8. சென்ற ஞாயிறன்று நான் அளித்த செய்தியின் விளைவாக அநேக கடிதங்கள் இங்கு வந்து குவிந்துள்ளன.

அந்த செய்திக்கு என்ன தலைப்பு கொடுத்தேன் என்று எனக்கு மறந்துவிட்டது.

உங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைக் குறித்து நான் எதையோ கூறினேன்.

நான் எதைக் கூறினாலும், அது அநேகரால் தவறாகப் புரிந்துக் கொள்ளப்படுகின்றது. அவர்கள் தவறாக அதைப் புரிந்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புவதனால் அல்ல; எதேச்சையாக அதைத் தவறாகப் புரிந்துக் கொள்கின்றனர்.

ஒருவர், "அப்படியானால் நான் கார் வாங்கலாமா?" என்றும் வேறொருவர், "நான் என்ன

செய்யவேண்டும்?” என்றும் கேட்கின்றனர்.

“ஒருவருக்கும் கடன்படாதீர்கள்” (ரோமர் 13:8) என்று இயேசு அல்லது வேதம் கூறுவது அதைக் குறித்தல்ல. நீங்கள் நீண்ட காலமாக கடனை வைத்துள்ளதையே (lingering debts) அது குறிக்கின்றது. அதை நீங்கள் செலுத்திவிடுங்கள், நாம் வீட்டு வாடகை, தொலைபேசி கட்டணம் போன்றவைகளை கடன்பட்டு, அவைகளைச் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

**ஆனால் நீங்கள் நீண்ட காலமாக வைத்துள்ள கடன்களை, உங்களால் கூடுமானால், செலுத்தி தீர்த்துவிடுங்கள். அது இன்னும் உங்கள் பேரிலே இருக்க விட்டு வைக்க வேண்டாம்.**

**9.** நான் சிறுவனாயிருந்த போது, ஒரு சமயம் வியாதிப்பட்டது என் நினைவுக்கு வருகின்றது.

நான் இரண்டாயிரம் டாலர்கள் கடன்பட்டு, மருத்துவமனையிலிருந்து வெளி வந்தேன்.

திரு. ஸ்வானிகர் என்பவர் வைத்திருந்த மருந்து விற்பனை ஸ்தலம் ஒன்று இங்கு முன்பிருந்தது.

அவரிடம் மருந்து வாங்கினதால், நான் முன்னூறு அல்லது நானூறு டாலர்கள் கடன்பட்டேன். அவருக்கு என்னைத் தெரியாது. அந்த மனிதன்...

நான் அவரிடம் சென்றேன். எனக்கு அவரைத் தெரியாது. ஆயினும் அவர் மருந்தை அங்கு அனுப்பிக் கொண்டிருந்தார். அதை அனுப்ப அவர் மறுக்கவேயில்லை.

நான் அவரிடம், “உங்களுக்கு நான் கடன் தர வேண்டும்” என்றேன். நான் கூறினேன். அது ஸ்வானிகர் அல்ல, கோர்ட் அவின்யூ அண்டு ஸ்பிரிங் என்னுமிடத்தில் திரு. மேசன் என்பவர்.

நான் அவரிடம், “உங்களுக்கு நான் கடன் தரவேண்டும். நான் இன்னும் மிகவும் பலவீனமாயுள்ளேன். எனினும் நான் வேலைக்குச் செல்ல முயன்று வருகிறேன். என்னால் செலுத்த முடியாவிட்டால்...”, நான்

அப்பொழுதுதான் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட சமயம்.

நான் அவரிடம், “திரு. மேசன் அவர்களே, முதலாவதாக தேவனிடம் எனக்கு ஒரு கடமையுண்டு. அவருக்கு தசமபாகம் செலுத்த நான் கடமைப்பட்டுள்ளேன். முதலாவதாக நான் அவருக்கு என் தசமபாகத்தைச் செலுத்த வேண்டும்” என்றேன்.

மேலும் நான், “என்னுடைய அடுத்த கடமை, என்னுடைய கடன்களை செலுத்துவது, என் தந்தையும் வியாதியுள்ளவர்...

எங்களுடைய குடும்பத்தில் நாங்கள் ஆக மொத்தம் பத்து பிள்ளைகள். என்னுடைய சம்பள நாளன்று நான் உங்களுக்கு இருபத்தைந்து செண்டுகள் கூட செலுத்த முடியாவிட்டால், -உங்களிடம் வந்து 'என்னால் செலுத்த இயலவில்லை' என்று கூறிவிடுவேன்" என்றேன்.

ஆனால் தேவனுடைய உதவியால் நான் எல்லா கடன்களையும் அவருக்கு செலுத்தி தீர்த்துவிட்டேன். பாருங்கள்? அதைத்தான் நான் குறிப்பிடுகின்றேன். பாருங்கள்?

செய்ய வேண்டாம்... அன்றொருவர் கூறினார்.

10. ஓ, இச்சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர் ஒருவர் ஒருமுறை தன் காரைப் பழுது பார்த்தாராம்.

அவர் பழுது பார்த்த அந்த நபரிடம், "எனக்குச் சனிக்கிழமை ஊதியம் கிடைக்கும். உமக்கு சேர வேண்டியதை அன்று செலுத்திவிடுகிறேன்" என்று கூறிவிட்டு வந்துவிட்டாராம். ஆனால் அவரோ அதைத் தரவேயில்லை.

வாரங்களுக்குப் பின் வாரங்கள் அநேகம் கடந்த போதிலும், பழுது

பார்த்தவருக்கு சேர வேண்டிய தொகையை அவர் செலுத்தவேயில்லை; அதைக் குறித்து ஒரு வார்த்தையும் அவரிடம் கூறவுமில்லை.

அந்த மனிதன் என்னிடம் புகார் செய்தார்.

பாருங்கள், அது சபைக்கு இழுக்கு உண்டாக்குகின்றது. அது கிறிஸ்துவுக்கும், இழுக்கு உண்டாக்குகின்றது.

“கொடுத்து விடுவேன், நான் ஒரு கிறிஸ்தவன், என்னால் உடனடியாக கொடுக்க இயலவில்லை... நான் உங்களுக்கு

பாக்கி இருக்கிறது” என்று சொல்லுங்கள்.

ஞாபகமிருக்கட்டும். நீங்கள் செய்யும் ஒவ்வொன்றும் தேவனுடைய புஸ்தகங்களில் குறிக்கப்படுகின்றது...

இதை உங்களுக்கு மாத்திரம் கூறாமல், எனக்கும் சேர்த்து கூறிகிறேன். ஆயத்தப்பட முயலுங்கள். ஏனெனில் ஏதோ ஒன்றின் அருகாமையில் நாம் வந்துக் கொண்டிருக்கிறோம்.

நிகழ வேண்டிய ஏதோ ஒன்றிற்கு வெகு

அருகாமையில் நாம் வந்திருக்கிறோம். எனவே நாம் ஆயத்தமாக விரும்புகிறோம்.

ஆண்டவருடைய வருகை இவ்வளவு அருகாமையில் உள்ளபோது, அந்த மகத்தான நேரத்திற்காக நாம் ஆயத்தப்பட விரும்புகிறோம்.

